# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
Spl. **SESSIONS CASE NO. 31 /19 PW 73**

Name : திருமதி. கீதா விசாரணை ஆரம்பித்த நேரம் **:12.05 (**மதியம்**)**
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 6th July 2019.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குனராக பணிபுரிகிறேன். கடந்த 29.6.2015 அன்று நான் அறிவியல் அலுவலராக இருந்த போது ஈரோடு இருப்பு பாதை காவல் நிலைய குற்ற எண் 90/15 என்ற வழக்கில் இறந்து போன கோகுல்ராஜ் ஆண் வயது 21 என்பவரின் உடலை உடற்கூறாய்வு செய்த பின்னர் பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவம் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனையிலிருந்து அவரின் வேண்டுகோள் கடிதத்துடன் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ரவி திருச்செங்கோடு நகர காவல் நிலையத்தை சேர்ந்தவரிடம் அவரின் உடல் உள்ளுறுப்புகளை ரசாயண பரிசோதனை செய்ய ஆய்வகம் அனுப்பி வைத்ததை பெற்றுக்கொண்டு ஆய்வக எண் SLM/TOX/H946/15 என்ற எண்ணிற்கு பரிசோதனைக்கு எடுத்துக்கொண்டதில் அனுப்பப்பட்ட உடல் உள்ளுறுப்புகளின் விவரங்கள் மற்றும் அதன் அறிக்கை விவரங்கள் பின்வருமாறு :

1. இரப்பை, மற்றும் அதனுடன் சார்ந்த பொருட்கள்
2. குடல் அதனுடன் சார்ந்த பொருட்கள்
3. கல்லீரல் மற்றும் சீறுநீரகம்
4. இந்த உடல் உள்ளுறுப்புகளை பதப்படுத்த பயன்படுத்தப்பட்ட திரவம்

இந்த நான்கையும் பரிசோதனை செய்ததில் ஆல்கஹாலோ, அல்லது விஷமோ எதுவும் கண்டறியப்படவில்லை. அந்த ஆய்வு முடிந்த பின்னர் 20.7.2015 என்ற தேதியிட்ட அறிக்கையினை பேராசிரியர் சட்டம் சார்ந்த மருந்துவம் அரசு மோகன்

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

குமாரமங்கலம் மருத்துவமனை அவர்களிடம் 21.7.2015 அன்று தலைமை காவலர் 850 திரு. பரமசிவம் என்பவரிடம் திருச்செங்கோடு காவல் நிலையத்தை சேர்ந்தவரிடம் ஆய்வக முத்திரையிட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

என்னிடம் காட்டப்படுவதுதான் நான் அனுப்பிய அறிக்கை ஆகும். அது அதாசா ஆ 226 . இது தொடர்பாக சி.பி.சி.ஐ.டி யின் ஏ.டி. எஸ்.பி என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை ( 1 முதல் 15 எதிரிகள் தரப்பில்)**</u>

மேலே குறிப்பிட்ட பொருட்கள் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. ஆய்வுகள் எப்படி செய்வது என்பது என்னனென்ன தேவை என்பதும் தெரியும். மேலே குறிப்பிட்ட பொருட்களில் சிறிய பகுதி எடுத்து எங்களுக்கு அனுப்பப்பட்டது. இவ்வாறு அனுப்பபட்ட பொருட்களுடன் மருத்துவரின் கடிதமும் வந்தது. மருத்துவர் அனுப்பும் பொருட்களின் எடை, கனபரிமாணம் ஆகிய விவரங்களை குறிப்பிடவேண்டும் என்றால் அப்படி குறிப்பிட தேவையில்லை. எடை, கனபரிமாணம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் பரிசோதனை செய்யப்படுகிறது என்றால் சரிதான். நான் அந்த பொருட்களின் எடை, கனபரிமாணம் ஆகியவற்றை கண்டுபிடித்தேன் என்றால் சரிதான். என்னுடைய அறிக்கை அதசாஆ 226 ல் அதுபற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆல்கஹால் வெவ்வேறு வேதியல் பொருட்களில் சேர்க்கப்படும்போது வேதியியல் மாற்றம் ஏற்படும் என்றால் சரிதான். அந்த மாற்றங்களின் தன்மை சேர்க்கப்படும் வேதியியல் பொருளை பொருத்து இருக்கும் என்றால் சரிதான். பொருட்கள் உப்பு கரைசலில் அனுப்பப்பட்டது. உப்புகரைசல் என்பது வேதியியல் பொருள். பாதுகாப்பு திரவம் என்பது பலவகைப்படும் என்றால் சரிதான். என்னுடைய அறிக்கையில் என்ன பாதுகாப்பு திரவம் பயன்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உயிருடன் இருக்கும்போது ஆல்கஹால் சாப்பிட்டால் உடலில் அது ஜீரணிக்கப்படுகிறது, அல்லது வெளியேற்றப்படுகிறது என்றால் சரிதான். அது அந்தந்த நபரின் உடலின் தன்மையை பொறுத்தது என்றால் சரிதான். ஒருவர் இறந்துவிட்டால் அவரது உடல் அழுக ஆரம்பிக்கிறது. பலவித மாற்றங்களை அடைகிறது என்றால் சரிதான். திசுக்கள், இரத்தம் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படும் என்றால் சரிதான். அதனால் அந்த உடலில் இருக்கும் ஆல்ஹகால் மற்றும் பொருட்களில் மாற்றம் ஏற்படும் என்றால் சரிதான். இந்த நபர் இறந்து எத்தனை நாட்கள் கழித்து பொருட்கள் எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு கொடுக்கப்படவில்லை. பொருட்கள் நீதிபதியின் கடிதத்துடன் அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. பொருட்களுடன் வழக்கின் சுருக்கம் கொடுக்கப்பட்டது. எனது ஆய்வும்

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

சரியல்ல, முடிவும் சரியல்ல என்றாலும் எனக்கு கொடுக்கப்பட்ட வழக்கின் சுருக்கத்திற்கேற்ப அறிக்கை கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

**விசாரணை முடிந்த நேரம்** : 12.25

UTL
MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**DEPOSITION OF WITNESS**
(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
Spl. **SESSIONS CASE NO. 31 /19 PW 74**

Name : ஜெகநாதன் விசாரணை ஆரம்பித்த நேரம் **:12.28 (**மதியம்)
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 6th July 2019.

**முதல் விசாரணை**

நான் தற்போது தர்மபுரி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.6.2015 அன்று சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குனராக பணிபுரிந்தபோது, ஈரோடு இருப்பு பாதை காவல் நிலைய குற்ற எண் 90/15, மற்றும் திருச்செங்கோடு நகர காவல் நிலைய குற்ற எண் 289/15 என்ற வழக்கிற்கு சம்மந்தப்பட்ட இறந்துபோன கோகுல்ராஜ் என்பவரின் மாதிரி இரத்தம் ஆனது சல்லடை துணியில் இருந்ததை பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனை சேலம் அவர்களிடமிருந்து பிரேத பரிசோதனை எண் 1162/15 நாள் 27.6.2015 மூலமாக சரியான முத்திரையுடன் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ரவி திருச்செங்கோடு நகர காவல் நிலையம் என்பவர் மூலமாக பெறப்பட்டதை மேலாய்விற்காக குருதிவடிநீரியல் பிரிவு, தடய அறிவியல் துறை சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த அறிக்கை எண் SLM/BIOL/323/15 நாள் 13.8.2015 மூலமாக பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் இதே வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஏழு வழக்கு பொருட்கள் சரியான முத்திரையுடன் 29.7.2015 அன்று நீதித்துறை நடுவர் திருச்செங்கோடு அவர்களிடமிருந்து கடிதஎண் 1249/2015 நாள் 28.7.2015 மூலமாக காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ரவி என்பவர் மூலமாக பெறப்பட்டது. அந்த ஏழு பொருட்களையும் ஆய்வு செய்த அறிக்கையின் விவரம் பொருள் எண் 1. கரும்பழுப்பு நிற கறையுடன் கூடிய கிழிந்த நீல நிற ஜீன்ஸ் பேண்ட் 2. கரும்பழுப்பு நிற கறையுடன் கூடிய கிழிந்த கத்திரிபூ நிற முழுக்கை சட்டை 3. கரும்பழுப்பு நிற கறையுடன் கூடிய கிழிந்த வெளிர் சாம்பல் நிற முண்டா பனியன் அதில் கருப்பு நிற பார்டரும் கூடியது. 4.

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

கரும்பழுப்பு நிற கறையுடன் கூடிய கிழிந்த நீலநிற ஜட்டி 5. கரும்பழுப்பு நிற கறையுடன் கூடிய வெளிர் சாம்பல் நிற கருப்பு பார்டருடன் கூடிய பனியன் துண்டுபகுதி,6. கரும்பழுப்பு நிற கறையுடன் கூடிய 5 சிறிய கற்கள் 7. ஐந்து சிறிய கற்கள்

மேற்கண்ட பொருட்களை ஆய்வு செய்ததில் பொருள் எண் 1 முதல் 6 வரையிலான பொருட்களில் இரத்தக்கறை இருப்பது கண்டறியப்பட்டது. பொருள் எண் 7ல் இரத்தக்கறை கண்டறியப்படவில்லை. இரத்தக்கறை கண்டறியப்பட்ட மாதிரிகள் மேலாய்விற்காக குருதிவடிநீரியல் பிரிவு, தடய அறிவியல் துறை சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அறிக்கை இவ்வாய்வக உயிரியல்எண் SLM/BIOL/362/15 நாள் 6.8.2015 மூலமாக நீதித்துறை நடுவர் திருச்செங்கோடு அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அறிக்கை எண் SLM/BIOL/323/15 நாள் 13.8.2015 அது **அதாசா ஆ** 227

அறிக்கை எண் SLM/BIOL/362/15 நாள் 6.8.2015 அது **அதாசா ஆ** 228

இது தொடர்பாக சி.பி.சி.ஐ.டி.யின் ஏ.டி.எஸ்.பி. என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (1 முதல் 15 எதிரிகள் தரப்பில்) :**

பொருட்கள் எங்கள் அலுவலகத்தில் பெறப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. எங்களுக்கு கொடுக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில்தான் அறிக்கை அனுப்பப்படுகிறது என்றால் சரிதான். அறிக்கையில் அந்த ஆவணங்களை பார்வையில் குறிப்பிடுவோம் என்றால் சரிதான். **அதாசா ஆ** 228 ல் பார்வையில் குற்ற எண் 289/15 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். **அதாசா ஆ 228** ல் எனக்கு மாதிரி இரத்தம் அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். இரத்தம் மாதிரி திரவமாகவோ அல்லது காய்ந்த நிலையிலோ மாதிரியாக எடுத்து அனுப்புவார்கள். சிலைடில் இரத்தம் மாதிரி எடுப்பதில்லை. அதாசா ஆ 228 ல் இரத்தம் தோய்ந்து காணப்படுகிறதா இல்லையா என்பது குறித்து மட்டும் நான் பரிசோதித்து பார்த்தேன். அது மனித இரத்தமா, என்ன வகை என்பதை கண்டறிய சென்னைக்கு அனுப்பி வைத்தேன்.

அதாசா ஆ 227 ல் எனக்கு மாதிரி இரத்தம் வரப்பெற்றுள்ளது. அதை நான் பரிசோதனை செய்யவில்லை. அப்படியே சென்னைக்கு பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். என் அலுவலகத்தில் பெறப்பட்டு அதே நிலையில் சென்னைக்கு அனுப்பி

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

வைக்கப்பட்டது. அதாசா ஆ 227 ல் சல்லடை துணியில் என்று குறிப்பிட்டுள்ளேன். அதனால் அது காய்ந்த நிலையில் இருந்த இரத்தம் ஆகும். திரவ நிலையில் இருந்த இரத்தம் எதுவும் பெறப்படவில்லை.

**மறுவிசாரணை:** இல்லை

**விசாரணை முடிந்த நேரம் : 1.00 (மதியம்)**

UTL
MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**

**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
Spl. **SESSIONS CASE NO. 31 /19 PW 75**

Name : கொளஞ்சியப்பன் விசாரணை ஆரம்பித்த நேரம் **:1.03 (**மதியம்**)**
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 6th July 2019.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.9.2015 அன்று சேலம் வட்டார தடய ஆய்வகத்தில் துணை இயக்குனராக இருந்தேன். தற்போது ஒய்வு பெற்றுள்ளேன். கடந்த 26.6.2015 அன்று உதவி இயக்குனராக சேலத்தில் பணிபுரிந்த போது துணை காவல் கண்காணிப்பாளர் செல்வி விஷ்ணு பிரியா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க திருச்செங்கோடு டவுண் காவல் நிலைய குற்ற எண் 289/15 சம்மந்தப்பட்ட வழக்கில் குற்ற நிகழ்விடத்தை பார்வையிட வேண்டுகோள் விடப்பட்டது. அதன்படி 26.6.2015 அன்று காலை 11 மணியளவில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி, மருத்துவமனையின் சவக்கிடங்கில் நான் இவ்வழக்கின் இறந்துபோன நபரின் உடலை பார்வையிட்டேன். அப்போது காவல்துறை மற்றும் மருத்துவ அலுவலர்கள் உடன் இருந்தனர். சவக்கிடங்கில் கண்ட பிரேதத்தின் மீதான பார்வை குறிப்பை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளேன்.

பிரேதமானவரின் உடல், தலையில்லா முண்டம், மற்றும் சிதைந்துபோன தலை என இரு பகுதிகளாக காணப்பட்டது. கிழிந்த நீலநிற ஜீன்ஸ் பேண்டும், கிழிந்த கத்தரி பூ நிற முழுக்கை சட்டையும், கருப்பு பார்டருடனும் கூடிய வெளிர் சாம்பல் நிற முண்டா பனியனும், Poomer என்று குறிக்கப்பட்ட கருநீலநிற ஜட்டியும், அணிந்த நிலையில் பிரேதத்தின் முண்டம் காணப்பட்டது. முண்டத்தின் கழுத்துப்பகுதி, இடது காதின் கீழ்பகுதி வரை காணப்பட்டது. துண்டிக்கப்பட்ட கழுத்துப்பகுதி (முண்டம்) குறுக்கு வாட்டில் பல வெட்டுக்காயங்கள் காணப்பட்டது. முண்டத்தின் கைகளிலோ, கால்களிலோ, இதர பாகங்களிலோ வேறு காயங்கள் ஏதும் காணப்படவில்லை. இரு கைகளும், இரு கால்களும், எந்த வித வெளி காயமோ, பாதிப்போ இல்லாமல் இயல்பு நிலையில் மாற்றம்

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

இல்லாமல் காணப்பட்டது. பனியனின் மேல்புற முதுகுபகுதியிலும், அதை ஒட்டிய சட்டையின் பகுதியிலும் ஜீன்ஸ் பேண்ட்டின் பின்பக்கத்திலும் இரத்தக்கறை காணப்பட்டது. துண்டிக்கப்பட்ட தலையானது சுத்தமாக சேதமடைந்த நிலையில் இயல்பான பரிமாண தோற்றம் இல்லாமல் காணப்பட்டது. தலையின் கபால எலும்புகள் உடைந்து சிதிலமானதால் தலையின் இயல்பு பரிமாண தோற்றம் இல்லாது போய்உள்ளது என தெரிகிறது. இடது கண் பகுதி காயம்பட்டு சிதிலமாக காணப்பட்டது. தலையின் அடிப்பகுதியில் இடது காதின் மேல் பகுதியின் பெரும்பகுதி காணப்படுகிறது. தலை துண்டிக்கப்பட்ட தலையின் வலது காது முழுமையாக காணப்பட்டது. மூக்கு, காது, தலையின் தோல், முகத்தோல் பகுதிகள் அப்போதும் பிரேதமானவரின் முக விவரங்களை அடையாளம் காணும் வகையில் இருந்தது. ஆயில், எண்ணெய், கிரீஸ், கருப்பு கறை ஏதும் தலையில்லா முண்டத்திலோ, துண்டிக்கப்பட்ட தலையிலோ, அவருடைய உடைகளிலோ காணப்படவில்லை. 26.6.2015 பகல் 1 மணிக்கு சம்பவயிடமான ஈரோடு இருப்பு பாதை காவல் நிலைய குற்ற எண் 90/2015 கான மின்தட கம்பங்கள் 383/11 மற்றும் 383/13 இடையிலான சம்பவயிடத்தை பார்வையிட்டேன். அப்போது காவல் மற்றும் மருத்துவ அதிகாரிகள் உடன் இருந்தனர். தலையில்லா முண்டம் கிடந்ததாக சொல்லப்படும் பகுதியில் இரண்டு பக்கமும் இரயில்வே பாதையை பார்வையிட்டேன். மீண்டும் 27.6.2015 அன்று போலீசார் எடுத்த போட்டோவை பார்வையிட்ட பிறகு மதியம் 3 மணிக்கு மீண்டும் பார்வையிட்டேன். அதன்படி பார்வை குறிப்பை கீழ்கண்டவாறு பதிவு செய்தேன்.

பார்வையிட்ட இடம் இருப்புபாதையின் தெற்கு பக்கம் காவேரி கிராஸ் என்ற ஸ்டேசனும், வடக்கு பக்கம் அனங்கூர் என்ற ஸ்டேசனும் உள்ளது. இந்த அகல இருப்பு பாதையானது மேல்தடமாக வடக்கு நோக்கி மட்டுமே செல்லக்கூடிய அனங்கூர், சங்ககிரி, சேலம் செல்லும் பாதை ஆகும். 383/11 மற்றும் 383/13 என்ற கம்பங்கள் இருப்புதடத்தின் கிழக்குபக்கம் அமைந்துள்ளது. கிலோ மீட்டர் கல் 383/300 இருப்பு பாதையின் மேற்கு பக்கம் உள்ளது. மின்தட கம்பம் 383/11 மற்றும் 383/13 மஞ்சள் நிற போர்டு **C. No. 27D.2SE**100km **R 75M** இருப்பு பாதையின் கிழக்கு பக்கமாக உள்ளது. கிலோ மீட்டர் ஸ்டோன் 383/300 அந்த இருப்பு பாதையின் மேற்கு புறமாக உள்ளது. வரைபடத்தில் 1 என்று பதியப்பட்ட இடத்தில் இரயில்வே இருப்பு பாதையின் சிமெண்ட் சிலிப்பர் கட்டையிலும், அதை ஒட்டிய சரலை கற்களிலும் இரத்தக்கறை மற்றும் வெட்டிய முடிக்கற்றை கிடந்தது. போட்டோவில் காண்பித்தபடி தலையில்லா முண்டம் கிடந்த பகுதி கவிழ்ந்த நிலையில் கால்கள் தெற்கு நோக்கி இரண்டு தண்டாவளங்களுக்கும் நடுவில் கிடப்பதாக போட்டோவில் காணப்பட்டது. தண்டவாளத்தில் சிலிப்பர் கட்டையிலிருந்து இரத்தகறை கிடந்த இடத்தில் இருந்து சுமார் 55 அடி தூரத்தில் வடக்கு பக்கம் 383/11

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

என்ற மின்கம்பம் அமைந்துள்ளது. இரத்தக்கறை படிந்துள்ள இடத்தில் கிலோ மீட்டர் கல் 383/90 வடக்கு பக்கமும், மஞ்சள் நிற சிமெண்ட் போர்டு C. No. 27D.2SE100km R 75M கிழக்கு பக்கமும் அமைந்துள்ளது. Rough Sketch 4 என குறிப்பிடப்பட்ட இடத்தில் ஏற்கனவே இரத்தக்கறை கிடந்த இடத்திலிருந்து தெற்கு நோக்கி சுமார் 7 அடி தூரத்தில் கிழக்கு தண்டவாளத்தின் உள்புறம் மூளைதிசு மற்றும் முடிகள் ஒட்டிக்கொண்டிருந்தன. அந்த தண்டவாளத்தின் வெளிபுறம் உள்ள சரலைகற்களில் இரத்தக்கறைகள் காணப்பட்டன. அந்த இடமானது போட்டோவில் கண்டபடி துண்டிக்கப்பட்ட தலை கிடந்ததாக சொல்லப்பட்ட இடம் ஆகும். கிழக்கு தண்டவாளத்தின் மேல்புறம், வெளிபுறம் எந்தவித இரத்தக்கறைகளோ, திசுக்களோ, முடிகளோ இல்லை. அதே போல மேற்கு தண்டவாளத்தில் எந்தவித இரத்தக்கறைகளோ, திசுக்களோ, முடிகளோ இல்லை. இந்த தடமானது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி மேல்தட ஒரு வழி பாதை என்பதால் நுண்ணிய ஆய்வின் படி இரத்தக்கறை கிடந்த இடத்திலிருந்து வடக்கு நோக்கி சுமார் 200 அடி தூரம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் எந்தவிதமான எந்தவித இரத்தக்கறைகளோ, திசுக்களோ, முடிகளோ, எலும்புகளோ, துணிதுண்டுகளோ எதுவும் காணப்படவில்லை. குறிப்பிட்டு அந்த கிழக்கு தண்டவாளத்திலோ, அதன் அருகிலோ காணப்படவில்லை. கிலோ மீட்டர் கல் 383/300 வடக்கு நோக்கி சுமார் 90 அடி தூரத்தில் மேற்கு தண்டவாளத்தை ஒட்டி ஒரு வழிபாதை வருகிறது. இதில் ஒரு ஜோடி செருப்புகள் அந்த இடத்தில் இருந்ததாக போலீசார் தெரிவித்தனர். அதே போல கிலோ மீட்டர் கல் 383/300 சுமார் 100 அடி தெற்கு புறம் பார்வையிடப்பட்டது. அந்த பகுதியில் எந்தவித இரத்தக்கறைகளோ, திசுக்களோ, முடிகளோ இல்லை. கீழ்கண்டவாறு எனது கருத்துரையை தெரிவித்துள்ளேன்.

கருத்துரை : ஓடும் ரயில் வண்டி சக்கரத்தில் ஒருவரின் தலை துண்டிக்கப்படவேண்டுமாயின் அந்த நபர் உடலை வெளிப்புறமாக வைத்துக்கொண்டு, கழுத்தை தண்டவாளத்தில் வைத்திருக்க வேண்டும். அல்லது அந்நபர் தன் உடலை குறுக்காக தண்டவாளங்களுக்கு இடையில் வைத்துக்கொண்டு தலையை வெளிப்புறமாக வைத்து, கழுத்தை தண்டவாளத்தில் வைத்திருக்க வேண்டும். ஒரு நபர் தன்னுடைய உடலை வெளிப்புறமாக வைத்துக்கொண்டு கழுத்தை தண்டவாளத்தில் வைத்து தலை உள்புறமாக வைத்தால் துண்டிக்கப்பட்ட தலையானது ரயில்வே தண்டவாளங்களுக்கு இடையிலும், தலை துண்டிக்கப்பட்ட முண்டம் தண்டவாள்த்துக்கு வெளியிலும் இருக்கும். ஒரு நபர் தன் உடலை இரு தண்டவாளத்தின் குறுக்காக வைத்து கழுத்தை தண்டவாளத்தில் வைத்து தலையை வெளிப்புறமாக வைத்திருந்தால் ஓடும் ரயில் சக்கரத்தில் கழுத்து துண்டிக்கப்பட்டு, தலை தண்டவாளத்துக்கு வெளியிலும் தலையில்லா முண்டம்

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

தண்டவாளங்களுக்கு இடையிலும் கிடக்கும். மேற்கண்ட இரண்டு சூழ்நிலைகளிலும் கழுத்துப் பகுதியானது, ரயில் வண்டியின் கெய்டு வீல் மற்றும் வண்டியின் மேல்பகுதியில் பட்டு முழுமையாக அரைபட்டுவிடும். ரயில் தண்டவாளத்தின் மேல்பாகம் 7.5 செ.மீ அகலம் ரயில் கெய்டுவீல் மற்றும் வீல் பகுதி அகலம் 7.5 செ.மீட்டரை விட கூடுதலானது. கழுத்துப்பகுதியை தண்டவாளத்தில் வைத்திருந்தால் 7.5 செ.மீ அகலத்திற்கு கழுத்துப்பகுதி அரைபட்டு காணாமல் போய் இருக்கும். மேற்கண்ட இரண்டு சம்பவத்திலும் இரத்தம், முடி , திசுக்கள் அரைபட்டு ரயில் சக்கரத்துடன் சிறிது தூரம் சென்று கிடந்திருக்கும். இந்த குற்ற நிகழ்விடத்தில் இரத்தம், முடி, திசுக்கள் எதுவும் வடக்கு நோக்கி பார்வையிட்டதில் அவ்வாறு எதுவும் காணப்படவில்லை. பிரேத பரிசோதனையின் போது தலையுடன் இணைந்த கழுத்து பகுதியிலும், முண்டத்திலும் இணைந்த கழுத்துப்பகுதியிலும் உள்ள எலும்புகளை கணக்கிட்டால் எலும்புத்துண்டுகள் ஏதேனும் காணாமல் போய்விட்டதா என்று கண்டறியமுடியும். இதன்மூலம் கழுத்தில் ரயில் சக்கரம் ஏறியுள்ளதா என்பதை கண்டறியமுடியும். கழுத்தில் இருக்ககூடிய காயத்திலும், தலையில்லா முண்டத்தில் உள்ள காயத்திலும், ஆராய்ந்து பிணக்கூறாய்வின் போது இறப்பிற்கு முன்ஏற்பட்ட காயமா, இறப்பிற்கு பின் ஏற்பட்ட காயமா என கண்டறியமுடியும். இதனுடைய காயங்கள் தன்மை, மற்றும் எப்படி ஏற்பட்டது என்பதை பிணக்கூறாய்வின் போது கண்டறியலாம்.

முடிவு : - பிணக்கூறாய்வு சான்றிதழக்கு சங்கடமில்லாமல் மேற்கண்ட பார்வைகுறிப்பில் மற்றும் போட்டோக்கள், இரத்தம் கிடந்த இரயில்வே தண்டவாளங்கள், கழுத்துப்பகுதி எதுவும் காணாமல் போகவில்லை என்று தெரியவருகிறது. எனவே இது ரயில் சக்கரம் ஏறி இறந்திருக்க வாய்ப்பில்லை என அறிகிறேன். மேலும் கீழ்கண்ட தடயங்களை சம்பவயிடத்தில் கைப்பற்றி மேலாய்விற்காக அனுப்ப அறிவுரை வழங்கப்பட்டது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் 1 என்று குறிப்பிடப்பட்டுள்ள ரயில்வே தண்டவாளங்களுக்கு இடையே உள்ள 383/11 மற்றும் 383/13 இடையே உள்ள சிலிப்பர் கட்டையில் உள்ள ரத்தத்தை ஈர சல்லடை துணியில் தோய்த்து எடுத்து மற்றும் சிமெண்ட் சிலிப்பர் கட்டையின் அருகாமையில் இருந்த இரத்தம் தோய்ந்த சரலைக்கற்களையும், முடிகளையும் எடுக்கப்பட்டது. வரைபடத்தில் 4 என குறிப்பிடப்பட்ட கிழக்கு தண்டவாளத்தின் உட்புறத்தில் ஒட்டியிருந்த மூளை திசு மற்றும் முடி ஈர சல்லடை துணியால் எடுக்கப்பட்டது. வரைபடத்தில் 4 என குறிப்பிடப்பட்ட கிழக்கு தண்டவாளத்தின் வெளிப்பகுதியில் இரத்தத்துடன் காணப்பட்ட சரலைக்கற்கள் ஆய்வுக்காக எடுக்கப்பட்டது. மேற்கண்ட இரத்தகறைகளும், முடிகளும், தண்டவாளங்களுக்கு இடையே இருந்த கோகுல்ராஜ் அணிந்திருந்த துணிகளும்

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

ஆய்வுக்காக அனுப்ப பரிந்துரை செய்யப்பட்டது. மேலும் மூளைதிசுக்கள், ஒட்டியுள்ள முடிகள், வெட்டிய தலையில் உள்ள முடிகள் இவற்றோடு ஒப்பிட்டு பார்க்க பரிந்துரைக்கப்பட்டது. தலையில்லா முண்டம் மற்றும் வெட்டிய தலை வேதியியல் பகுப்பாய்வு செய்ய பரிந்துரைக்கப்பட்டது. இறந்தவரின் ஒருவிரல் ரேகை, இறந்தவர் அவர்தானா என்பதை அறிந்துகொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும் தலையில்லா முண்டம், மற்றும் துண்டிக்கப்பட்ட தலையின் திசுக்களை மரபணு சோதனைக்கு உட்படுத்தி இறந்தவர் கோகுல்ராஜ் தானா என்பதை அறிய விசாரணை அதிகாரிக்கு அறிவுரை வழங்கபட்டது.

என்னிடம் காட்டப்படுவதுதான் நான் வழங்கிய அறிக்கை.

அந்த அறிக்கையோடு 1 சம்பவயிடத்தின் மாதிரி வரைபடம் 2. சம்பவ இடத்தின் அளவீடுகள் 3. சம்பவயிடத்தை மேலே இருந்து எடுக்கப்பட்ட போட்டோ மற்றும் இரண்டு தண்டவாளங்களுக்கு இடையே இரத்தக்கறை இருந்த சிமெண்ட் சிலிப்பர் கட்டையின் புகைப்படம் 4. இரத்தம் படிந்த சிமெண்ட் சிலிப்பர்கட்டை இரு தண்டவாளங்களுக்கு இடையே உள்ளது அதன் போட்டோ மேலும் வரைபடத்தில் 4 என குறிப்பிடப்பட்ட கிழக்கு தண்டவாளத்தின் உட்புறத்தில் எடுக்கப்பட்ட போட்டோ 5. தலையில்லா முண்டத்தின் போட்டோ மற்றும் துண்டிக்கப்பட்ட தலையில்லா முண்டத்தின் வெட்டப்பட்ட முண்டத்தின் கழுத்துப்பகுதி போட்டோ 6. கோகுல்ராஜ் உடைய முக தோற்றத்தின் போட்டோ மற்றும் முன் கழுத்தின் தலையில்லா முண்டத்தின் போட்டோ ஆகியவற்றை இணைத்துள்ளேன்.

அந்த அறிக்கை 6 இணைப்புகளுடன் **அதசா ஆ** 229 ( **வரிசை** ) ஆகும்.

8.8.2015 நாளிட்ட எனது அறிக்கையை மேற்கு மண்டல காவல் துறை தலைவர், சேலம் சரக காவல் துறை துணைத்தலைவர், நாமக்கல் காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் சேலம் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு நகல் அனுப்பினேன்.

இந்த ஆய்வு சம்மந்தமாக சி.பி.சி.ஐ.டி யில் ஏ.டி.எஸ்.பி என்னை விசாரித்தார்.
நான் இடத்தை பார்வையிட்ட போது **அதசாஆ** 229 வரிசையுடன் இணைக்கப்பட்டுள்ள அசல் போட்டோக்களை போலீசார் என்னிடம் காட்டினார்கள்.

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சாட்சி முதல் விசாரணை முழுவதும் சம்பவ இடம் என்று சொன்னதை பொறுத்து ஆட்சேபணை செய்தார்.)**

**(மதிய உணவு இடைவேளைக்காக சாட்சி விசாரணை 2.35 மணிக்கு நிறுத்தி வைக்கப்பட்டு மீண்டும் 3.35 மணிக்கு தொடங்கப்பட்டது.)**

<u>குறுக்கு விசாரணை (1 முதல் 15 எதிரிகள் தரப்பில்) :</u>

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குவிமுச பிரிவு 231 ன் கீழ் மனுதாக்கல் செய்ததால் குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டது. )

UTL
MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com